# இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
# தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும்
# இறுதிப் பரீட்சை - 2009
# தொழிலுரிமைத்துவம் - MCC 1201
# காலம்: இரண்டு (2) மணித்தியாலங்கள்

159

திகதி: 05.12.2009 நேரம்: 10.00 மு.ப – 12.00 மதியம்

**எவையேனும் நான்கு (4) வினாக்களுக்கு விடையளிக்குக.**
**அனைத்து வினாக்களும் சம புள்ளிகளைக் கொண்டுள்ளன.**

01. "அனைத்து வியாபாரிகளும் பிறப்பு வழி தொழிலுரிமையாளர்களில்லை"
இக் கூற்றினை ஏற்றுக் கொள்கின்றீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

02. உமது தந்தை அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறிய போது ரூபா. 150,000/= பெற்றுக் கொண்டதாகக் கருதவும். நீர் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் தொழிலுரிமைத்துவமும், சிறிய வியாபார முகாமைத்துவமும் கற்கை நெறியினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து தராதரப்பத்திரம் பெற்றிருக்கின்றீர். அதனால் உமது தந்தை தகுந்த வியாபாரமொன்றில் மேற்குறிப்பட்ட பணத்தை முதலீடு செய்யவதற்காக உமது ஆலோசனையினை எதிர்பார்க்கின்றார். உமது தந்தைக்கு முதலீட்டு வாய்ப்புக்கள், நீண்ட காலம் நிலைத்திருப்பதனை நிட்சயப்படுத்துவதற்கு பின்பற்றப்படும் தந்திரோபாயங்கள் ஆகியவற்றினைப் பற்றி நீர் வழங்கும் ஆலோசனையினை அடிப்படையாகக் கொண்டு சுருக்கமான அறிக்கையொன்றினைத் தயாரிக்குக.

03. இலங்கையில் ஆரம்பிக்கப்படும் கணிசமானளவு சிறிய வியாபாரங்கள், ஆரம்பத்திலிருந்தே தோல்வியடையும் தன்மையினைக் காட்டுகின்றன. இதற்குரிய நான்கு காரணிகளை ஆராய்க. தோல்வியடைந்த 25 தொழிலுரிமையாளர்களிடம், உமது காரணிகளை நிருபிப்பதற்காக நீர் கேட்கும் 10 வினாக்களைப் பட்டியலிடுக.

04. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் தொழிலுரிமைத்துவமும், சிறிய வியாபார முகாமைத்துவமும் கற்கை நெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்து தராதரப்பத்திரம் பெற்றுள்ள உமக்கு, சிறிய வியாபார முகாமைத்தும் பற்றி உரையொன்றினை வழங்குவதற்காக உமது பகுதியிலுள்ள "சனச" வங்கிக் கிளை அழைப்பொன்றினை விடுத்துள்ளது. சிறிய வியாபாரங்களை மேம்படுத்துவதற்காக அவ் வங்கியின் அங்கத்தவர்களை ஊக்கப்படுத்தும் பொருட்டு 20 நிமிட உரையொன்றினை வழங்குவதற்காக உம்மிடம் எதிர்பார்க்கப்படுகின்றது. உமது உரையின் முக்கிய அம்சங்களை வெளிப்படுத்தி குறிப்பொன்றினைத் தயாரிக்குக.

05. பின்வருபனவற்றிக்கு சிறு குறிப்பெழுதுக.

1. தொழிலுரிமைத்துவத்தினை வரையறுத்து, அதனை சுருக்கமாக விளக்குக.
2. இடர் தாங்கும் தன்மைகள் யாவை?
3. பெரிய தர வியாபார நிறுவனமொன்றிக்கு அண்மையில் அமைந்திருக்கும் அதே வியாபாரத்தைக் கொண்ட சிறிய வியாபாரங்களும் வெற்றிகரமாக முன்னேறுகின்றன. இதன் பின்னனியிலுள்ள இரகசியங்களை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக

(பதிப்புரிமையுடையது)